செ.வெ.எண்: 74 நாள்: 24.10.2017

கரூர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து காத்திருக்கும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள், வேலைவாய்ப்பற்ற மாற்றுத்திறனாளிகள் மற்றும் பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள், உதவித்தொகை திட்டங்களின் கீழ் உதவித்தொகை பெறுவதற்கான விண்ணப்பங்களை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள அழைக்கப்படுகிறார்கள்.

இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.கோவிந்தராஜ் அவர்கள் தெரிவிக்கையில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் (பொது) கீழ் பயன்பெற, பள்ளியிறுதி வகுப்பு தோல்வி, பத்தாம்வகுப்பு, பிளஸ்2 மற்றும் பட்டப்படிப்பு தகுதியை கரூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து 01.07.2017 முதல் 30.09.2017 வரையான காலாண்டில் , 5 ஆண்டுகள் நிறைவு செய்யும் அனைவரும் தகுதியுடையவர்கள் ஆவர். அதேபோல் வேலைவாய்ப்பற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை திட்டத்தின்கீழ் பயன்பெற 01.07.2017 முதல் 30.09.2017 வரையான காலாண்டில் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து ஓராண்டு நிறைவு செய்யும் எஸ்.எஸ்.எல்.சி/எஸ்.எஸ்.எல்,சிக்கும் கீழ் தகுதி/ ப்ளஸ் 2 மற்றும் பட்டப்படிப்பு தகுதிபெற்ற மாற்றுத் திறனாளிகள் அனைவரும் தகுதியுடையவராவர்.

வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை திட்டத்தின் (பொது) கீழ் பயன்பெறுவோர்களின், ஒட்டுமொத்த குடும்ப வருமானம் ஆண்டுக்கு ரூ.50,000/– க்கு(ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மிகாமல் இருத்தல் வேண்டும். வேலைவாய்ப்பற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை திட்டத்தின் கீழ் பயன்பெறுவோர்களது குடும்ப வருமானத்திற்கு உச்ச வரம்பு கிடையாது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற உச்சவயது வரம்பு தாழ்த்தப்பட்ட/ பழங்குடிவகுப்பினருக்கு 45வயதும், இதர வகுப்பினருக்கு 40வயதும் ஆகும். உதவித்தொகை பெற விரும்புவோர் தினசரி பயிலும் மாணவராக (Regular) இருத்தல் கூடாது விண்ணப்பதாரர் அரசுத்துறை/தனியார் துறையில் எந்தவிதமான ஊதியம் பெறும் பணியிலோ அல்லது சுயவேலைவாய்ப்பில் ஈடுபடுபவராகவோ இருத்தல் கூடாது. இவர்களுக்கு விண்ணப்பபடிவங்கள் 25.10.2017 முதல் இலவசமாக வழங்கப்பட உள்ளது .

மேலும், ஏற்கனவே இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்று வரும் பயனாளிகள் அனைவரும் தங்களது வங்கி கணக்கு எண் புத்தகத்தினை அக்டோபர் 2017 வரை உரிய குறிப்புகள் இடப்பட்டு அசல் வேலைவாய்ப்பு அடையாள அட்டையும், அனைத்து பயனாளிகளின் பதிவு எண்ணில் ஆதார் அடையாள அட்டை எண் இணைக்கும் பொருட்டு ஆதார் எண்ணுடன், சுய உறுதி மொழி ஆவணம் சமர்ப்பிக்கவும் இதன் மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தகுதி உள்ள விண்ணப்பதாரர்கள் அனைவரும் வேலைவாய்ப்பு அடையாள அட்டை, அசல் குடும்ப அடையாள அட்டை மற்றும் அசல் கல்விச்சான்றிதழ்கள் ஆகியவற்றுடன் அலுவலக வேலைநாளில், முற்பகல், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு நேரில் வந்து விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.கோவிந்தராஜ் இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.**